




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”



FLY TOWARDS
DIGITAL INNOVATION

Services / சேவைகள்

✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT

9080999823
7695883647

வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 311 | 04.05.2026 | MONDAY | CHITHIRAI: 21 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 311 | 04.05.2026 | திங்கள்கிழமை | சித்திரை : 21 | விலை : ரூ.5/- |


## தமிழகம் உட்பட 5 மாநிலங்களில்

# “ஜெயிக்கப்போவது யாரு?..”

## இன்று வாக்கு எண்ணிக்கை...

**சென்னை: மே.4–**

தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநில சட்டப் பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறுகிறது. தமிழகத்தில் பாதுகாப்புக்கு 1 லட்சம் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15ம் தேதி வெளியிட்டது. அதன்படி, புதுச்சேரி, கேரளா, அசாமில் கடந்த ஏப்.9ம் தேதியும், தமிழகத்தில் கடந்த ஏப்.23ம் தேதியும் ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடந்தது. மேற்கு வங்கத்தில் ஏப்.23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டமாக நடைபெற்றது. அங்கு 2ம் கட்ட தேர்தலில் முறைகேடு புகார்கள் எழுந்ததால், 15 வாக்குச்சாவடிகளில் நேற்று மறு வாக்குப்பதிவு நடத்தப்பட்டது.

இதேபோல, கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய 6 மாநிலங்களில் காலியாக உள்ள பேரவைத் தொகுதிகளுக்கு ஏப்.9, 23 ஆகிய தேதிகளில் இடைத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொருத்தவரை, மொத்தம் 4,023 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர். 5.73 கோடி வாக்காளர்களில் 4.88 கோடி பேர் வாக்களித்தனர். இதன்மூலம் 85.10 சதவீத வாக்குப்பதிவு நடந்து, சாதனை படைக்கப்பட்டுள்ளது.



கடந்த 23ம் தேதி மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீலிடப்பட்டு, தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள 62 மையங்களில் பாதுகாப்பு அறைகளில் (‘ஸ்டிராங் ரூம்’) வைக்கப்பட்டுள்ளன. இங்கு 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக 5 மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் இணைய வழியில் ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் விளக்கினார். ‘‘தமிழகத்தில் 62 மையங்களில் 65 கம்பெனி துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். 18 ஆயிரம் போலீஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க சுமார் 1 லட்சம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொகுதிக்கு ஒரு வாக்கு எண்ணிக்கை பார்வையாளர் என 234 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்’’ என்று அவர் தெரிவித்தார்.

முழு அமைதி, பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தமிழகம் முழுவதும் நாளை மதுக்கடைகளை மூடவும் அவர் உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 62 மையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், குடிநீர், கழிவறை, ஒளி, ஒலி வசதிகள், மின் இணைப்பு தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நேற்று ஆய்வு செய்தனர்.

மேற்கு வங்கத்தில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பாக, அமைதியாக, வெளிப்படையான சூழலில் நடைபெறுவதை உறுதி செய்ய 165 கூடுதல் வாக்கு எண்ணிக்கை பார்வையாளர்கள், 77 காவல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. தமிழகத்துக்கு அவ்வாறு நியமிக்கப்படவில்லை என தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## ‘உழைக்கும் மக்களுக்கு எதிரான தாக்குதல்’ வணிக சிலிண்டர் விலை உயர்வுக்கு இந்திய கம்யூ கண்டனம்

புதுச்சேரி, மே.4-

புதுச்சேரியில் நீட் தேர்வின்போது பழைய ஹால் டிக்கெட் எடுத்து வந்த மாணவியை சமாதானப்படுத்தி, அவரது தந்தையை புதிய ஹால்டிக்கெட்டை எடுத்து வரச் செய்து, பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் உதவினர். அதேபோல் மற்றொரு இடத்தில் நேரமானதால் தேர்வு மையத்துக்கு டூவீலரில் மாணவியை பெண்காவலர் அழைத்துச் சென்றார்.

எம்பிபிஎஸ், பல் மருத்துவம் உள்பட மருத்துவ படிப்புக்கான நீட் நுழைவு தேர்வு (ஞாயிற்றுக்கிழமை) நாடு முழுவதும் நடந்தது. புதுச்சேரி பிராந்தியத்தில் 9 மையங்களில் நடந்த நீட் தேர்வை எழுத 4,440 பேருக்கு ஹால் டிக்கெட் அனுப்பப்பட்டிருந்தது.

அதிகபட்சமாக பல்கலைக்கழகத்தில் 960 பேர், தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் 720 பேர், ஜிப்மர் கேந்திரியா வித்யாலயா பள்ளியில் 480, காலாப்பட்டு கேந்திரிய வித்யாலயா பள்ளியில் 240, நவோதயா வித்யாலயா பள்ளியில் 240, சின்னத்தா அரசு பெண்கள் பள்ளியில் 480, திருவள்ளுவர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 480, வில்லியனூர் கண்ணகி அரசு பெண்கள் பள்ளியில் 480, பாரதிதாசன் அரசு பெண்கள் கல்லூரியில் 360 பேர் என நீட் தேர்வு எழுதினர்.

நீட் தேர்வினையொட்டி தேர்வர்களுக்கு பல்வேறு கட்டுபாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. தேர்வர்கள் அரைகை கொண்ட வெளிர் நிற ஆடைகளை மட்டுமே அணிந்து வர வேண்டும். முழுக்கை கொண்ட சட்டைகள் அல்லது ஆடைகளை அணிய அனுமதி இல்லை. ஆடைகளில் பெரிய பட்டன்கள், பேட்ஜ்கள் அல்லது எம்பிராய்டரி டிசைன்கள் இருக்க கூடாது.

குறைந்த உயரம் கொண்ட சாதாரண காலணிகளை மட்டுமே அணிந்து இருக்க வேண்டும். இருபாலரும் எக்காரணத்தை கொண்டும் ஷூக்கள் அணிய கூடாது. தேர்வர்கள் காதணிகள், மோதிரங்கள், பதக்கங்கள், கழுத்தணிகள், வளையல்கள், கொலுசுகள் போன்ற எவ்விதமான நகைகளையோ, ஆபரணங்களையோ அணிந்து வரக்கூடாது.

மத அல்லது கலாச்சாரரீதியான ஆடைகளை அணிந்து வரும் தேர்வர்கள், முறையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். தேர்வர்கள், தேர்வு மையத்துக்கு முன்கூட்டியே வர வேண்டும் என்ற அறிவிப்பின்படி பெரும்பாலானோர் நேரத்தோடு வந்தனர்.

பாரதிதாசன் மகளிர் கல்லூரி மையத்துக்கு அப்படி வந்த கிருஷ்ணா நகரைச் சேர்ந்த கனீஷ்கா கடந்த முறை தேர்வு எழுத பயன்படுத்திய ஹால் டிக்கெட்டை எடுத்து வந்து விட்டார். இதனால் அவர் அனுமதிக்கப்படவில்லை. இதனை மாணவி வெளியே வந்து கூறியதைக் கேட்டு, பெண்ணின் தந்தை வீட்டுக்கு விரைந்து சென்றார். அதே நேரத்தில் தேர்வர்களும் காவல்துறையினரும் அவரைச் சமாதானப்படுத்தி தேர்வு மைய வளாகத்தில் காத்திருக்க வைத்திருந்தனர். மதியம் 1:30 ஆனதைத் தொடர்ந்து தேர்வு அதிகாரிகள் மதியம் 1:30 ஆகிவிட்டது. இனி மாணவர்கள் யாரும் அனுமதிக்கப்பட்ட மாட்டார்கள் என கூறி கேட்டை மூடினர்.

அதற்குள் தனது தந்தைக்குத் தொலைபேசி மூலம் கனிஷ்கா தொடர்பு கொண்டார். அவர் போனை எடுக்கவில்லை. இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. கதவை மூடும் கடைசி நேரத்தில் தந்தை ஓடி வந்து மகளிடம் புதிய ஹால் டிக்கெட்டை நீட்ட காவல்துறை அதிகாரிகளும் தேர்வு மைய அதிகாரிகளும் விரைந்து செயல்பட்டு மாணவியைத் தேர்வுக்குச் செல்ல உதவினார்கள். இதனால் பாரதிதாசன் கல்லூரி தேர்வு மையம் அரை மணி நேரத்திற்குப் பரபரப்புடன் காணப்பட்டது.

அதேபோல் புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக் கழக நீட் தேர்வு மையத்துக்கு 1.25 மணிக்கு வந்த ஒரு மாணவியை பெண் காவலர் பாக்கியலட்சுமி தன்னுடைய இரண்டு சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று உதவினார்.

## ‘நடப்பாண்டு 27 திட்டங்களை செயல்படுத்த இஸ்ரோ திட்டம்’ விஞ்ஞானிகள் அறிவிப்பு

டெல்லி, மே.4-

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இந்த நிதியாண்டுக்கான (2026-2027) ஆண்டு அறிக்கையை தற்போது வெளியிட்டு உள்ளது. அதில் செயல்படுத்துவதற்காக 27 விண்வெளி திட்டங்களை பட்டியலிட்டுள்ளது.

குறிப்பாக புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்கள் 3. தகவல் தொடர்பு செயற்கைக்கோள்கள் 2, வழிசெலுத்தல் செயற்கைக்கோள்கள் 2, தொழில்நுட்ப செயல்விளக்கி 3, பி.எஸ்.எல்.வி. 4, ஜி.எஸ்.எல்.வி. 3, எல்.வி.எம். 1, எஸ்.எஸ்.எல்.வி. 5 மற்றும் ககன்யான் 4 திட்டங்கள் நடப் பாண்டு செயல்படுத்த இஸ்ரோ திட்டமிட்டு உள்ளது.

மனிதனை விண்ணுக்கு அழைத்து செல்லும் ககன்யான் திட்டத்திற்காக விண்ணில் ஏவப்படும் முதல் ஆளில்லா ககன்யான் சோதனை ராக்கெட் பயணத்திற்கு இஸ்ரோ தயாராகி வருகிறது. இஸ்ரோவின் விண்வெளி திட்டங்களுக்கு இந்திய விண்வெளித்துறைக்கு தற்போது 450 தொழிற்சாலைகளும், 130க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் ஆதரவு அளித்து வருகின்றன.

இஸ்ரோ கடந்த ஆண்டு விண்ணில் ஏவிய பி.எஸ்.எல்.வி. சி62 ராக்கெட்டின் 3வது கட்டத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு திட்டம் தோல்வி அடைந்தது. இதைத்தொடர்ந்து, இஸ்ரோ சற்று ஒரு பின்னடைவை சந்தித்ததாக கூறப்படுகிறது. இது கடந்த ஆண்டு மே மாதத்திற்கு பிறகு ஏற்பட்ட 2வது தொடர்ச்சியான தோல்வியாகும். இந்த நிதியாண்டில், 20252026ம் ஆண்டைவிட இருமடங்கு திட்டங்களை அது பட்டியலிட்டு உள்ளது.

ககன்யான் திட்டத்திற்கான பணிகளை இஸ்ரோ பட்டியலிட்டு உள்ளது. குறிப்பாக தரைவழி இணைப்பு சேனல்களை நிறுவுவதன் அவசியத்தை அது எடுத்துரைத்து உள்ளது. இந்திய கடற்படை நிலையம் மற்றும் ஸ்ரீஹரிகோட்டா பகுதி, பெங்களூருவில் உள்ள ககன்யான் திட்ட கட்டுப்பாட்டு மையம் மற்றும் ககன்யான் கட்டுப்பாட்டு வசதி ஆகியவற்றுக்கு இடையே தரைவழி இணைப்புகள் நிறுவப்பட்டு உள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் குறிப்பிட்டு உள்ளனர்.

ககன்யான் திட்ட கட்டுப்பாட்டு மையம், ககன்யான் கட்டுப்பாட்டு வசதி மற்றும் டெல்லியில் உள்ள குழு தொகுதி மீட்பு மையம் ஆகியவற்றுக்கு இடையேயான இணைப்பு நிறுவப்பட்டு சோதிக்கப்பட்டு உள்ளது. ஆட்கள் உள்ள மற்றும் ஆட்கள் இல்லாத திட்டங்களுக்கான தரை நிலைய ஆதர வுக்காக சுவீடன் விண்வெளி நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டு உள்ளது.

அதேபோல் ஆஸ்திரேலி யாவின் கோகோஸ் (கீலிங்) தீவுகளில் ஒரு தரை நிலைய முனையத்தை நிறுவுவதற்காக செயல்படுத்தப்பட்ட உரிமப் பத்திரமும் கையெழுத்திடப்பட்டு உள்ளது. இஸ்ரோவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையும், திருவனந்தபுரத்தில் உள்ள ஸ்ரீ சித்ரா திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்துடன் விண்வெளி மருத்துவத்தில் ஒத்துழைப்புக்கான ஒரு கட்டமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

## 70 ஆண்டுகளை நிறைவு செய்த அமலாக்கத் துறை: 94% குற்றங்கள் நிரூபணம், ரூ.2.36 லட்சம் கோடி சொத்து முடக்கம்

டெல்லி, மே.4-

மத்திய அரசின் கீழ் செயல்படும் அமலாக்கத் துறையின் 70வது நிறுவன தின விழா டெல்லியில் நடைபெற்றது. இதில் மத்திய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி, வருவாய்த் துறைச் செயலர் அரவிந்த் ஸ்ரீவஸ்தவா, கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி.ராஜு, அமலாக்கத் துறை மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.




நிகழ்ச்சியில் அமலாக்கத் துறை இயக்குனர் ராகுல் நவீன் அறிக்கை சமர்ப்பித்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது: இந்த நிகழ்ச்சி கொண்டாட்டத்துக்கு மட்டுமல்லாமல், சுய பரிசோதனை செய்யவும் எதிர்காலத்துக்கான பாதையை வகுக்கவும் முக்கியமானது. வங்கி மோசடிகள், நிறுவன முறைகேடுகள், ரியல் எஸ்டேட் மோசடிகள் போன்றவற்றின் மீதே அமலாக்கத் துறையின் கவனம் உள்ளது.

தற்போது, கிரிப்டோ மோசடி, சைபர் குற்றம், தீவிரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் போன்ற புதிய சவால்கள் உருவெடுத்துள்ளன. இந்த குற்றங்களை எதிர்கொள்ள அமலாக்கத் துறை தனது அணுகு முறையை மாற்றி அமைத்துள்ளது. குறிப்பாக போதைப் பொருள் கடத்தல் வலைப் பின்னல்களைப் பொருளாதார ரீதியாக முடக்குவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

உதாரணமாக, செங்கோட்டை குண்டுவெடிப்பு வழக்கில், தீவிரவாதம் மற்றும் உளவு நடவடிக்கைகளுடன் அதன் தொடர்புடைய பண மோசடி வழக்குகளில் அமலாக்கத் துறை விரைவான மற்றும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2025-26 நிதியாண்டில் அமலாக்கத் துறை 155 கூடுதல் புகார்கள் உட்பட மொத்தம் 812 குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்துள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டைவிட 2 மடங்கு அதிகம்.

அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்குகளில், இதுவரை 94 சதவீதக் குற்றங்கள் நிரூபணமாகி உள்ளன. தற்போது சுமார் 2,400 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இவற்றின் மீதான தீர்ப்புகள் விரைவில் வெளியாகும். இதுவரை மொத்தம் ரூ.2,36,017 கோடி மதிப்பிலான சட்டவிரோதச் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில் மட்டும் ரூ.81,422 கோடி மதிப்பிலான சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன. இது முந்தைய ஆண்டை விட 170 சதவீதம் அதிகம்.

மேலும், வங்கிகள், முதலீட்டாளர்கள் மற்றும் வீடு வாங்குவோர் போன்ற பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ரூ.63,142 கோடி திரும்ப ஒப்படைத்துள்ளது. பிஏசிஎல் லிமிடெட் மோசடி வழக்கில், முதலீட்டாளர்களுக்கு ரூ.15,581 கோடி திரும்ப வழங்கப்பட்டுள்ளது. உதய்பூரைச் சேர்ந்த மற்றொரு ரியல் எஸ்டேட் வழக்கில், இருநூற்றுக்கும் அதிகமான வீடுகளை வாங்குவோருக்கு அவர்களின் சொத்துக்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

இதுவரை, எப்இஓஏ (தப்பி ஓடிய பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டம்) கீழ் 54 நபர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. அவர்களில் 21 பேர் ‘தப்பி ஓடிய குற்றவாளிகள்’ என்று அறிவிக்கப்பட்டு, ரூ.2,178 கோடி மதிப்பிலான சொத்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் பேசினார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# மெட்ரோ ரயிலில் ஏப்ரலில் 90.18 லட்சம் பேர் பயணம்



சென்னை:மே. 04-
மெட்ரோ ரயிலில் ஏப்ரல் மாதத்தில் 90.18 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். சென்னையில் 2 வழித் தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி 3 லட்சம் பேர் பயணம் செய்கின்றனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில்களில் நடப்பாண்டில் ஏப்ரல் மாதத்தில் 90.18,069 பேர் பயணம் செய்துள்ளனர். இம்மாதத்தில் அதிகபட்சமாக. ஏப்.2ம் தேதி 3,65,807 பேர் பயணம் செய்துள்ளனர். சிங்கார சென்னை அட்டையை பயன்படுத்தி 45.18,247 பேரும், பயண அட்டைகளை பயன்படுத்தி 25,659 பேரும், க்யூஆர் குறியீடு பயணச் சீட்டைப் பயன்படுத்தி 44,74,163 பேரும் பயணம் செய்துள்ளனர்.டிஜிட்டல் எஸ்விபி, க்யூஆர் குறியீடு பயணச்சீட்டு, வாட்ஸ் அப் மற்றும் சிங்கார சென்னை அட்டை பயணச் சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ ரயில்களில் பயணிப்பவர்களுக்கு 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. மெட்ரோ ரயில் நிலைய கவுன்ட்டர்களில் வாங்கப்படும் காகித க்யூஆர் பயணச்சீட்டுகளுக்கு இந்த தள்ளுபடி கிடையாது என மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்

# டெல்லி அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து: குழந்தை உள்பட 9 பேர் உயிரிழப்பு




புது டெல்லி: மே. 04-
டெல்லி, விவேக் விஹார் பகுதியில் உள்ள நான்கு மாடி குடியிருப்பில், இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர், 4 பேர் காயமடைந்தனர். முதற்கட்ட விசாரணையின்படி, இந்த தீ விபத்து ஏசி வெடித்ததன் காரணமாகவே ஏற்பட்டிருக்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. டெல்லியின் விவேக் விஹார் பகுதியில் அமைந்துள்ள நான்கு மாடி குடியிருப்பு கட்டிடத்தில் இன்று அதிகாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர், 4 பேர் காயமடைந்தனர். தீ விபத்து குறித்த தகவல் கிடைத்ததும், 12 தீயணைப்பு வாகனங்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தன. உயிரிழந்த ஒன்பது பேரில் ஐந்து பேரின் உடல்கள் கட்டிடத்தின் இரண்டாவது தளத்திலிருந்தும், மூன்று பேரின் உடல்கள் படிக்கட்டுப் பகுதியிலிருந்தும் மீட்கப்பட்டன. ஒருவரின் உடல் முதல் தளத்திலிருந்து மீட்கப்பட்டது.

முதல் தளத்தில் உயிரிழந்தவர் நவீன் என்பவரின் மனைவி ஷிகா ஜெயின் (45) என அடையாளம் காணப்பட்டுள்ளது. இரண்டாவது தளத்தில் சோட்டே லால் என்பவரின் மகன் அரவிந்த் (60), அனிதா ஜெயின் (58), நிஷாந்த் ஜெயின் (35), அஞ்சல் ஜெயின் (33) மற்றும் ஒன்றரை வயது குழந்தையான மாஸ்டர் ஆகாஷ் ஜெயின் ஆகியோர் சடலமாக மீட்கப்பட்டனர்.

மூன்றாவது தளத்தில் நிதின் ஜெயின் (50), அவரது மனைவி ஷெய்லி ஜெயின் (48) மற்றும் அவர்களது மகன் சம்யக் ஜெயின் (25) ஆகியோர் உயிரிழந்தனர். இதுவரை பத்துக்கும் மேற்பட்டோர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.இந்த விபத்து குறித்த தகவல் அதிகாரிகளுக்கு அதிகாலை 3.47 மணியளவில் கிடைத்தது. தகவல் கிடைத்ததும், காவல் துறை அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். சிறிது நேரத்திலேயே தீயணைப்பு வாகனங்களும் அங்கு வந்து சேர்ந்தன. காவல் துறையினரின் தகவலின்படி, கட்டிடத்தின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தளங்களில் உள்ள குடியிருப்புகளைத் தீ சூழ்ந்துகொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்தத் துயரச் சம்பவம் குறித்துப் பேசிய டெல்லி அமைச்சர் ரேகா குப்தா, இது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு நிகழ்வு என்று குறிப்பிட்டார். மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்தார். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், அவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர் கூறினார்.அத்துடன், அதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகவும் அவர் உறுதி அளித்தார்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்ததுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திப்பதாகவும் கூறினார்.

# செங்கல்பட்டு: சமூக விரோதிகளின் கூடாரமாகும் மகளிர் சுய உதவிக் குழு கட்டிடங்கள்



செங்கலபட்டு மே. 04-
செங்கலபட்டு ஊராட்சிகளில் சேதமடைந்து செயல்பாடின்றி உள்ள மகளிர் சுய உதவி குழு கட்டிடங்களால் அரசின் நிதி வீணாகிறது. அவற்றில் புதர்மண்டி சமூக விரோத செயல்கள் நடந்து வருகிறது.தமிழகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாலெ அரசின் பெண்கள் மேம்பாட்டுக் கழகம் மூலம் முதன்முதலில், 1989ம் ஆண்டு தொடங்கப்பட்டது. மகளிர் சுயசார்பு பெற உதவியதால் இக்குழுக்கள் மிக வேகமாக அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டன. கிராமப்புற பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசு மகளிர் சுய உதவி குழு திட்டத்தை அறிமுகம் செய்தது. இத் திட்டத்தின் மூலம் ஊராட்சிகள் தோறும் பல்வேறு மகளிர் சுய உதவி குழுக்கள் தற் போது செயல்பட்டு வருகின்றன. ஊராட் சிகள் தோறும் மகளிர் சுய உதவி குழுக் களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதற்காக கட்டிடங்கள் கட்டப்பட்டன.

இந்த கட்டிடங்களில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தையல் பயிற்சி, கூடை முடைதல், சலவை சோப்பு தயாரித்தல், வீட்டு பராமரிப்புக்கான பினாயில் தயாரிப்பு, சாம்பிராணி, ஊதுபத்தி, சூடம் உள்ளிட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இந்த பயிற் சியை பெற்ற மகளிர் குழுக்கள் குழுவாக சேர்ந்தும் தனித்தனியாக வீடுகளிலும் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலமும் தாங்களாகவும் மக்களுக்கு நேரடியாக விற்பனை செய்து லாபம் ஈட்டி வந்தனர். இதற்கு ஊராட்சிகள் தோறும் கட்டப்பட்டிருந்த மகளிர் சுய உதவி குழு கட்டிடங்கள் மகளிருக்கு உதவியாக அமைந்திருந்தது. இதனிடையே காலப் போக்கில் இக்கட்டிடங்கள் பராமரிப்பின்றி கூரை இடிந்து விழுந்தும் மின் இணைப்பு இன்றியும் சேதமடைந்த நிலையில் உள்ளன. பல ஊராட்சிகளில் கட்டிடங்கள் சமூக விரோதிகளின் கூடாரமாகி உள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 395 ஊராட்சிகளில் மகளிர் குழு கட்டிடங்கள் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டன. அவற்றில் 90 சத வீத கட்டிடங்கள், பல ஆண்டுகளாக பாழாகியும் உள்ளன. இதனால் மகளிர் குழு கூட்டங்கள், கோயில், திண்ணை, வீடுகளின் மரத்தடியில் நடத்தப்படுகின்றன.

மகளிர் குழுவை சேர்ந்த சென்பகம் கூறியது: தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி பகுதிகளிலும் மகளிர் சுய உதவிக் குழு கட்டிடங்கள் மேற்கூரை, தரைத் தளம், பெயர்ந்து சேதமடைந்த நிலையில் பூட்டிக் கிடக்கின்றன. இதனால் மகளிர் சுய உதவி குழு கூட்டங்கள் நடத்த இட வசதி யின்றி தெருவில் சந்தித்து கூட்டம் நடத்தும் நிலை உள்ளது. கட்டிடங்களை பராமரிப்பதற்கு எங்களால் முடியவில்லை. மாறாக ஒன்றிய, மாவட்ட நிர்வாகம் தான் இதனை மேற்கொள்ள வேண்டும்.

அவர்கள் சரிவர செய்வதில்லை. சில இடங்களில் கட்சி பாகுபாடு பார்ப்பதால் கூட்டங்கள் அனுமதிப்பதில்லை. இதனால் வேறு இடங்களில் கூட்டத்தை நடத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் இதில் கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும். சேதமடைந்த மகளிர் சுய உதவிக்குழு கட்டிடங்களை அகற்றி புதிய கட்டிடங்களை மின் இணைப்புடன், தண்ணீர், கழிப்பறை வசதியோடு கட்டித்தர வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.

# பூந்தமல்லி அருகே குட்கா கடத்தி வந்த 2 பேர் கைது




பூந்தமல்லிமே. 04-
பூந்தமல்லி அருகே அரசால் தடை செய்யப்பட்ட குட்காவை கடத்தி வந்த 2 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆவடி காவல் ஆணையரகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களுக்கு எதிராக போலீசார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக பூந்தமல்லியை அடுத்த நசரத்பேட்டை பகுதியில் குட்கா கடத்திச் செல்லப்படுவதாக நசரத்பேட்டை போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்ட சாலையில் நசரத்பேட்டை போலீஸார் நேற்று வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த 2 சரக்கு வாகனங்களை சோதனை செய்தனர். அந்த வாகனங்களில் தடை செய்யப்பட்ட குட்கா மூட்டை மூட்டையாக இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து வாகனங்களை ஓட்டி வந்த தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கோபால் (35), சென்னை போரூரைச் சேர்ந்த முத்து ராஜ் (24), தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த ராமச் சந்திரன் (25) ஆகிய 3 பேரை நசரத் பேட்டை போலீஸார் நேற்று கைது செய்தனர்.

2,882 கிலோ பறிமுதல்: மேலும் அவர்களிடம் இருந்து 2,882 கிலோ குட்கா, 2 சரக்கு வாகனங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர். விசாரணை யில் அவர்கள் ஆந்திர மாநிலத்தில் இருந்து குட்காவை கடத்தி வந்து செங்கல்பட்டு மாவட்டத்துக்கு கொண்டு செல்வது தெரியவந்தது.

போலீஸாரின் விசாரணைக்கு பிறகு 3 பேரையும் பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற உத்தரவின்படி அவர்களை போலீஸார் புழல் சிறையில் அடைத்தனர்.

# பல நூறு கோடி மதிப்பில் வங்கி மோசடியில் ஈடுபட்ட நபரை இந்தியா அழைத்து வந்தது சிபிஐ

புதுடெல்லி:மே. 04-
ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) உட்பட பல நாடுகளில் ஏற்றுமதி தொழில் செய்து வந்தவர் கமலேஷ் பரேக். இவர் எஸ்பிஐ தலைமையிலான பல வங்கிகளில் பல நூறு கோடி கடன் பெற்று, அதை முறைகேடான வழியில் வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் மாற்றியுள்ளார். அதன்பின் அவர் யுஏஇ தப்பிச் சென்றார்.இவர் மீது நிதி மோசடி வழக்குப் பதிவு செய்த சிபிஐ, இவரை கைது செய்ய இன்டர்போலுக்கு ரெட் நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து பரேக்கை அமீரக அதிகாரிகள் கைது செய்தனர்.யுஏஇ உடனான குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தப்படி அவர் சிபிஐ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். நேற்று முன்தினம் டெல்லி அழைத்து வரப்பட்ட பரேக்கை, சிபிஐ அதிகாரிகள் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர்.

# கள்ளச் சந்தையில் காஸ் சிலிண்டர் விற்பனை: திருவான்மியூரில் தந்தை, மகன் கைது

சென்னை மே. 04-
திருவான்மியூரில் கள்ளச் சந்தையில் காஸ் சிலிண்டர்களை விற்பனை செய்த தந்தை, மகனை போலீஸார் கைது செய்து 40 சிலிண்டர்களை பறிமுதல் செய்தனர்.சென்னை, திருவான்மியூர், சித்திரை குளத் தெருவில் உள்ள ஒரு வீட்டில், வணிக மற்றும் வீட்டு உபயோக சிலிண்டர்கள் சட்ட விரோதமாகப் பதுக்கப்பட்டு, கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகத் திருவான்மியூர் போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதனடிப்படையில், நேற்று முன்தினம் அந்த வீட்டில் போலீஸார், சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்த வீட்டை ஒரு சிறிய கிடங்கு போல மாற்றி, அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஏராளமான சிலிண்டர்களைக் கண்டு போலீஸார் அதிர்ச்சியடைந்தனர். இது தொடர்பாக, அதே பகுதியைச் சேர்ந்த நீலமேகம் (80) மற்றும் அவரது மகன் குமார் (41) இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தினர்,

இருவரும் வீட்டு உபயோக சிலிண்டர்களைப் பதுக்கி, தட்டுப்பாடு நிலவும் சமயங்களில் தேவையுள்ளவர்களுக்கு ரூ.3 ஆயிரத்துக்கும், வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்களை ரூ.6,000 முதல் ரூ.7,000 வரை விற்று வந்தது விசாரணையில் அம்பலமானது.

தொடர்ந்து, வீட்டில் இருந்து 32 வீட்டு உபயோக சிலிண்டர்கள் மற்றும் 8 வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்கள் என மொத்தம் 40 சிலிண்டர்களை போலீ ஸார் பறிமுதல் செய்தனர். கைதான நீலமேகம் மற்றும் குமார் ஆகிய இருவரையும் திருவான்மியூர் போலீஸார், சிவில் சப்ளை சிஐடி போலீஸாரிடம் ஒப்படைத்தனர்

# பேரிடர் தகவல் அமைப்பு பரிசோதனை: நாடு முழுவதும் போன்களில் ஒலித்த 'பீப்' சத்தம்



புதுடெல்லி: :மே. 04-
இயற்கைப் பேரிடர் காலத்தில் செல்போன் மூலம் எச்சரிக்கை செய்யும் தகவல் அமைப்பை மத்திய அரசு நேற்று பரிசோதித்தது. இதனால் நாடு முழுவதும் செல் போன்களில் திடீரென 'பீப்' சத்தம் ஒலித்தது.பேரிடர் மற்றும் பொதுப் பாதுகாப்பு அவசர காலத்தில் செல்போன் மூலம் மக்களுக்கு எச்சரிக்கை செய்யும் தகவல் அமைப்பை (Cell Broadcast emergency alert system) மத்திய அரசு உருவாக்கி உள்ளது.இந்தத் தகவல் அமைப்பு நேற்று முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது. இதனால் நாடு முழுவதும் செல்போன் பயன்படுத்தும் கோடிக்கணக்கானோர் ஒரு சோதனைச் செய்தியைப் பெற்றனர்.

'அதிதீவிர எச்சரிக்கை' என்று குறிப்பிடப்பட்ட அந்தச் செய்தியில், 'புதிய உடனடி பேரிடர் எச்சரிக்கை சேவை' செயல்படுத்தப்பட்டு இருப்பது பற்றி தெரிவிக்கப்பட்டு இருந்தது. மேலும் இது ஒரு சோதனை மட்டுமே என்பதால் பதிலுக்கு எதுவும் செய்யத் தேவையில்லை என்று தெளிவுபடுத்தியது.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் வழிகாட்டுதலின் கீழ், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆதரவுடன், மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா, செல் பிராட்காஸ்ட் எச்சரிக்கை அமைப்பை அறிமுகப்படுத்தினார். இந்த அமைப்பு, இணைய வசதி அல்லது மொபைல் செயலி தேவையின்றி செயல்படுகிறது. வழக்கமான எஸ்எம்எஸ் எச்சரிக்கையை விட இது மேம்பட்டதாகும். உடனடியாக கவனத்தை ஈர்க்க கூடியதாகும்.செல்போன்கள் 'சைலன்ட்' ஆக வைக்கப்பட்டிருந்தாலும் அல்லது தொந்தரவு செய்ய வேண்டாம் (do-not-disturb) என்ற உத்தரவு ஆக்டிவேட் செய்யப்பட்டிருந்தாலும் ஒலியுடன் கூடிய எச்சரிக்கை தகவலை இது தரக்கூடியதாகும்.

# மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் திருப்தி இல்லை என்பது திமுக தலைமைக்கும் தெரியும்

## பெ.சண்முகம் விளக்கம்

சென்னை: :மே. 04-
மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் திருப்தி இல்லை என்பது திமுக தலைமைக்கும் தெரியும் என, தொகுதி பங்கீடு குறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் விளக்கமளித்துள்ளார்.

ரயில்வே துறையில் 30 ஆயிரம் பணியிடங்களை குறைக்கும் ரயில்வே வாரியத்தின் சுற்றறிக்கையை திரும்பப் பெற வலியுறுத்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டக் குழு சார்பில், கிண்டி ரயில் நிலையம் முன்பு கிளர்ச்சி பிரச்சாரம் நடைபெற்றது. கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் தலைமை தாங்கி, பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திமுக அரசு வேலை வாய்ப்பின்மைக்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இடதுசாரிகளுக்கு உரிய அங்கீகாரம் கொடுக்கவில்லை என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் முத்த தலைவர் கே.பாலகிருஷ்ணன் கூறியிருந்தார். அவரது பேட்டியை நான் நேரடியாக பார்க்கவில்லை. ஊடகங்களில் வந்ததை தான் பார்த்தேன். சட்டப்பேரவை தேர்தலில் இடது சாரி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை சம்பந்தமாக எங்களுக்கு திருப்தி இல்லை என்பதை, அப்போதே நான் வெளிப்படுத்தி இருக்கிறேன். அது திமுக தலைமைக்கும் தெரியும்.தொகுதி உடன்பாடு ஏற்படுவதற்கு முன்பாக எங்களுக்கு இருந்த கருத்துக்கள் என்பது வேறு. ஆனால், அதன்பின் அனைவரும் ஏற்றுக்கொண்டு உடன்பாடு ஏற்பட்ட பிறகு, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிக்கு, கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளுடன் இணைந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சிறப்பாக பாடுபட்டிருக்கிறது. அந்த வகையில், இந்த அணியின் வெற்றி என்பது தான் எங்களுடைய எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் வரும் மே.4ம் தேதி வெளியாகும் தேர்தல் முடிவுகள் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. சமீபத்தில் வெளியான கருத்து கணிப்புகள் யாவும் கருத்து கணிப்புகள் அல்ல, அவை கருத்து திணிப்புகளாகும். ஒவ்வொரு நிறுவனங்களும் தங்களை யார் பணியமர்த்தினார்களோ, அவர்களை திருப்தி செய்யக் கூடிய வகையில் கணிப்புகளை வெளியிட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்

# கருணாஸ், நிமிஷா சஜயனின் 'என்ன விலை'



சென்னை மே. 04-
கருணாஸ், நிமிஷா சஜயன் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'என்ன விலை'. சஜீவ் பழூர் இயக்கியுள்ள இதில் ஒய்.ஜி. மகேந்திரா, பூர்ணிமா பாக்யராஜ், மோகன் ராம், லொள்ளு சபா சுவாமிநாதன், கவிதாலயா கிருஷ்ணன், தீபா சங்கர், ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.சமூகஅரசியல் பின்னணியுடன் கூடிய குடும்ப த்ரில்லர் கதையாக உருவாகியுள்ள இப்படத்தை கலாமயா பிலிம்ஸ் சார்பில் கிதேஷ் வி தயாரித்துள்ளார். இப்படம் வெளிவருவதற்கு முன்பே தாதா சாகேப் பால்கே திரைப்பட விழாவில் சிறந்த திரைக்கதைக்கான விருதைப் பெற்றுள்ளது. இயக்குநர் சஜீவ் பழூர் கூறும்போது, "ஆழமான யதார்த்தமான களத்தில் இருந்து உருவான கதை இது. இந்தப் படம் தீவிரமான, ஆழமான அனுபவத்தைப் பார்வையாளர்களுக்குத் தரும்" என்றார்.

# கடும் வெயிலால் 12 மாநிலங்களில் பரவும் காட்டுத் தீ

## மத்திய பிரதேசத்தில் 634 இடங்கள் பற்றி எரிகின்றன

புதுடெல்லி::மே. 04-
கடும் வெயில் காரணமாக 12 மாநிலங்களில் 10 வனப் பகுதிகளில் காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகிறது. மத்திய பிரதேச வனப்பகுதிகளில் மட்டும் 634 இடங்களில் காட்டுத் தீ கொழுந்துவிட்டு எரிகிறது.

கோடைக் காலம் என்பதால், நாட்டின் பல பகுதிகளில் கடும் வெயில் காரணமாக வெப்ப அலை வீசுகிறது. இதன் காரணமாக 12 மாநிலங்களில் 10 வனப் பகுதிகளில் காட்டுத் தீ கடந்த 3 நாட்களுக்கு மேலாக பற்றி எரிவது செயற்கைக்கோள் படங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. மத்திய பிரதேச வனப் பகுதியில் 634 இடங்களில் காட்டு தீ பற்றியுள்ளன.வடக்கில் உத்தராகண்ட், மேற்கில் குஜராத் முதல் தெற்கே ஆந்திரா வரை 12க்கும் மேற்பட்ட மாநிலங்களில் பெரிய அளவிலான காட்டுத் தீ பரவியுள்ளது. இதன் காரணமாக பல உயிரினங்கள் இறந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

மகாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கர் மாநிலத்தில் தலா 465 இடங்களிலும், ஆந்திராவில் 400க்கும் மேற்பட்ட இடங்களிலும், அசாம் மாநிலத்தில் 190 இடங்களிலும், மணிப்பூரில் 128 இடங்களிலும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

உத்தராகண்ட்டில் மட்டும் 130 ஹெக்டேர் வனப் பகுதி காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டுள்ளது. சார்தாம் யாத்திரை நடைபெறும் பகுதிகளிலும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. தீயை அணைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கும்மிடிப்பூண்டி: நிலத்தை ஆக்கிரமிப்பவர் மீது நடவடிக்கை கோரி காவல் நிலையம் முன்பு தற்கொலை முயற்சி



கும்மிடிப்பூண்டிமே. 04-

கும்மிடிப்பூண்டியை அடுத்த தேர்வழி கிராமத்தை சேர்ந்தவர் அருள் (40). இவரது பக்கத்து வீட்டில் வசித்து வருபவர் தமக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமிக்க முயற்சிப்பதாகவும், இது தொடர்பாக நிலத்தை அளவீடு செய்து தருமாறு வருவாய்த் துறையில் 2 முறை பணம் செலுத்தியும் நடவடிக்கை இல்லை என்றும், தற்போது தடுப்பு சுவர் அமைக்க செங்கற்களை இறக்கி பணிகள் தொடங்குவதால் காவல்துறையினர் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனு அளித்துள்ளார்.ஆனால் போலீஸார் நடவடிக்கை எடுக்காததால் அருள், கும்மிடிப்பூண்டி காவல் நிலையம் முன்பு மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயற்சித்தார். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவல்துறையினர் அவரை தடுத்து நிறுத்தி உடலில் தண்ணீரை ஊற்றினர். தொடர்ந்து சமரச பேச்சுவாரத்தை நடத்திய காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி அங்கிருந்து அவரை அனுப்பி வைத்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# காப்பீட்டுத் துறையில் 100 சதவீத எப்டிஐ அனுமதி





புதுடெல்லி: மே. 04-

காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு (எப்டிஐ) உச்சவரம்பு 74% ஆக உள்ளது. இதை 100% ஆக உயர்த்த வகை செய்யும் 'சப்கா பீமா சப்கா ரக்ஷா மசோதா, 2025' கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கியதையடுத்து இது சட்டமாக அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி, காப்பீட்டுத் துறையில் தானியங்கி முறையில் 100% நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்கு மத்திய அரசு நேற்று அனுமதி வழங்கியது. எனினும், இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி முகமையின் (ஐஆர்டிஏமி) ஒப்புதல் மற்றும் சரிபார்ப்புக்கு உட்பட்டு இது செயல்படுத்தப்படும் என மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது. இதன் மூலம் இத்துறையில் வெளிநாட்டு நிறுவனங்கள் முழு உரிமையைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை இந்தியக் காப்பீட்டுத் துறையில் வெளிநாட்டுப் பங்கேற்பை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்ஐசி) ஒரு தனி விதியைப் பின்பற்றும். அதன்படி, எல்ஐசியில் வெளிநாட்டு முதலீடு தானியங்கி முறையில் 20% ஆக மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

# திருவொற்றியூரில் மூதாட்டியிடம் ரூ.500 'டம்மி' நோட்டை கொடுத்து ஏமாற்றிய பெண் கைது




சென்னை:மே. 04-

திருவொற்றியூர் மார்க்கெட்டில் பழ வியாபாரம் செய்யும் மூதாட்டியிடம், சிறுவர்கள் விளையாடும் ரூ.500 டம்மி நோட்டைக் கொடுத்து ஏமாற்றி, பழம் வாங்கிச் சென்ற பெண்ணை போலீஸார் கைது செய்தனர்.ஆந்திர மாநிலம், திருப்பதியைச் சேர்ந்த ஜெயலட்சுமி (66) என்ற மூதாட்டி, சென்னை, திருவொற்றியூர் மார்க்கெட் பகுதியில் பழம் வியாபாரம் செய்து வருகிறார். கடந்த 29ம் தேதி, அவரிடம் ஒரு பெண் ரூ.200க்கு மாம்பழம் வாங்கிக் கொண்டு ரூ.500 நோட்டை கொடுத்தார். அதனை உண்மை என நம்பிய மூதாட்டி, மீதம் ரூ.300ஐ திருப்பிக் கொடுத்துள்ளார். பெண் சென்ற பிறகு நோட்டைச் சோதிந்த போது, அது சிறுவர்கள் விளையாடும் டம்மி ரூபாய் நோட்டு என்பது தெரியவந்தது.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து மூதாட்டி கண்ணீர் விட்டு அழுத வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி, பொதுமக்களிடையே பெரும் அனுதாபத்தை ஏற்படுத்தியது. இதுகுறித்து, திருவொற்றியூர் போலீஸார் தீவிர விசாரணை நடத்தி, மூதாட்டியை ஏமாற்றிய எரணாவூரைச் சேர்ந்த பாக்கிய லட்சுமி (35) என்பவரை நேற்று கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட பாக்கியலட்சுமி போலீஸாரிடம் அளித்த வாக்கு மூலத்தில், 'தனது மகன் விளையாடிக் கொண்டிருந்த டம்மி நோட்டை எடுத்து தனது மணிபரஸில் வைத்து விட்டதாகவும், பர்ஸில் இருந்த ஒரிஜினல் ரூ.500 நோட்டுடன் இந்த டம்மி நோட்டும் கலந்திருந்ததை கவனிக்காமல், தெரியாமல் கொடுத்துவிட்டதாகவும்' அவர் கூறியுள்ளார். பாக்கியலட்சுமியின் விளக்கத்தைத் தொடர்ந்து, போலீஸார் சட்டப்படியான நடைமுறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மறுதேர்தல் நடத்த உத்தரவிட்ட நிலையில் துணிவிருந்தால் ஃபல்தாவில் தொகுதியில் போட்டியிட்டு பாரு!

## பாஜகவிற்கு கடும் சவால் விடுத்த திரிணாமுல் தலைவர்

கொல்கத்தா:மே. 04-

ஃபல்தா தொகுதிக்கு மறுதேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் பாஜகவிற்கு அபிஷேக் பானர்ஜி கடும் சவால் விடுத்துள்ளார். மேற்கு வங்க மாநிலம் டைமண்ட் ஹார்பர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட பல்தா சட்டசபை தொகுதியில், கடந்த ஏப். 29ம் தேதி இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெற்றது. அப்போது வாக்குப்பதிவு இயந்திரங்களில் பாஜக வேட்பாளரின் சின்னத்தை கருப்பு நிற டேப் மற்றும் மை கொண்டு மறைத்து முறைகேடு நடந்ததாக புகார்கள் எழுந்தன. மொத்தம் உள்ள 285 வாக்குச்சாவடிகளில் 60 மையங்களில் இதுபோன்ற விதிமீறல்கள் நடந்ததாகவும், 53 ஆயிரத்து 967 வாக்காளர்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

இதுகுறித்து ஆய்வு செய்த தேர்தல் ஆணையம், தேர்தல் நடைமுறையில் முறைகேடு நடந்ததை உறுதி செய்தது. இதனைத் தொடர்ந்து, பல்தா தொகுதிக்கு மட்டும் மே 21ம் தேதி மறுதேர்தல் நடத்தப்படும் என்றும், அதன் முடிவுகள் மே 24ம் தேதி அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு ஒரு தொகுதிக்கு முழுமையாக மறுதேர்தல் நடப்பது மேற்கு வங்க வரலாற்றில் இதுவே முதல்முறையாகும்.

தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, டைமண்ட் ஹார்பர் தொகுதி திரிணாமுல் காங்கிரஸ் எம்பி அபிஷேக் பானர்ஜி தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், 'எனது டைமண்ட் ஹார்பர் வியூகத்தை அசைத்துப் பார்க்க உங்கள் மேற்குவங்க எதிர்ப்பு குஜராத்தி கும்பலுக்கும், அவர்களின் ஏஜென்டாகச் செயல்படும் ஞானேஷ் குமாருக்கும் (தலைமை தேர்தல் ஆணையர்) 10 ஜென்மங்கள் எடுத்தாலும் முடியாது. உங்களின் மொத்த சக்தியையும் திரட்டி வாருங்கள். ஒன்றிய அரசிற்கே சவால் விடுகிறேன், நேராக பல்தாவிற்கு வாருங்கள்.

டெல்லியில் இருக்கும் உங்கள் பலமான தலைவர்களை அங்கு போட்டியிடச் சொல்லுங்கள். உங்களுக்குத் தைரியம் இருந்தால் ஃபல்தா தொகுதியில் களமிறங்குங்கள்' என்று ஆவேசமாகச் சாடியுள்ளார். இதற்கிடையே, தேர்தல் ஆணையத்தின் உத்தரவைத் தொடர்ந்து முறைகேட்டில் ஈடுபட்டதாக திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் ஜஹாங்கீர் கானின் கூட்டாளிகள் இருவரை போலீசார் கைது செய்துள்ளனர்

# திசையன்விளையில் வணிகர் சங்க முப்பெரும் விழா! விக்கிரமராஜாவுக்கு 100 வாகனங்கள் புடைசூழ பிரம்மாண்ட வரவேற்பு



திசையன்விளை மே 04-

நெல்லை மாவட்டம் திசையன்விளை பொன் மஹாலில், அனைத்து வியாபார சங்க பேரமைப்பின் 7ம் ஆண்டு விழா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கூட்டம் மற்றும் மே 5ல் திருவாரூரில் நடைபெறவுள்ள 43வது வணிகர் விழிப்புணர்வு மாநாட்டிற்கான ஆலோசனை கூட்டம் என முப்பெரும் விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.*பிரமாண்ட ஊர்வலம்:*விழாவிற்கு வருகை தந்த மாநிலத் தலைவர் விக்கிரமராஜா, திசையன்விளை காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர், மேளதாளங்கள் மற்றும் பட்டாசு முழங்க, நூற்றுக்கும் மேற்பட்ட இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் இளைஞரணியினர் அணிவகுக்க, உற்சாகமாக ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.*நிர்வாகிகள் நியமனம்:* தெற்கு மாவட்டத் தலைவர் PDP. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக சாந்தகுமார், துணை அமைப்பாளர்களாக ஜிபிஎம் குமார் மற்றும் முகமது ரசீம் பொறுப்பேற்றுக்கொண்டனர். விழாவில் மூத்த வணிகர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.*முக்கிய தீர்மானங்கள்:*நெல்லை தெற்கு மாவட்ட இளைஞரணியில் ஆயிரம் புதிய உறுப்பினர்களை சேர்க்குதல், மே 5ம் தேதி திருவாரூரில் நடைபெறும் வணிகர் விழிப்புணர்வு மாநாட்டில் திசையன்விளையிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்களில் சென்று பங்கேற்பது. மாநில இளைஞரணி அமைப்பாளர் ஸிரி சண்முகவேல், சென்னை மாநகர அமைப்பாளர் AMV பிரதாப்ராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர். திசையன்விளை பேரமைப்பு நிர்வாகிகள் மற்றும் தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகிகள் எனப் பலர் திரளாகக் கலந்து கொண்டனர். ஆசிரியர் ஜி.சுயம்புராஜன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க, நிவிவி குமார் நன்றியுரை ஆற்றினார்.

# நாங்கள் இந்தியாவைப் போல் இல்லை; எரிபொருள் வளத்தில் நிலைமை மோசம் பாகிஸ்தான் அமைச்சர் ஒப்புதல்



இஸ்லாமாபாத்:மே. 04-

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் போர் பதற்றம் காரணமாகப் பாகிஸ்தானில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்நிலையில் பாகிஸ்தானின் சமா டிவிக்கு அளித்த பேட்டி பாகிஸ்தான் அமைச்சர் அலி பெர்வேஸ் மாலிக் கூறியதாவது:எரிபொருள் வளத்தில் பாகிஸ்தான் நிலைமை மோசமாகவே இருக்கிறது. பாகிஸ்தானிடம் தற்போது அவசர கால (போர்) தேவைக்கான எரிபொருள் இருப்பு ஒரு நாள் கூட கிடையாது என்பதே உண்மை. எங்களிடம் இருப்பது வணிக ரீதியான இருப்பு மட்டுமே.

கச்சா எண்ணெய் 5 முதல் 7 நாட்களுக்கு மட்டுமே வரும். எண்ணெய் நிறுவனங்களிடம் உள்ள சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் அதிகபட்சம் 20 முதல் 21 நாட்களுக்கு மட்டுமே இருக்கும்.நாங்கள் இந்தியாவைப் போன்றவர்கள் அல்ல. இந்தியாவோ 70 நாட்களுக்குத் தேவையான எரிபொருளைச் சேமித்து வைத்துள்ளது. அங்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டால், ஒரு கையெழுத்தில் அந்த இருப்பை வெளியிட்டு அவர்களால் நிலைமையைச் சீர் செய்ய முடியும். நீண்ட காலத்துக்கு எரிபொருள் தேவையைச் சமாளிக்க இயலும். ஆனால், பாகிஸ்தான் எளிதில் நிலைகுலையும் நிலையில் உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.




# சென்னை: கன்டெய்னர் லாரி மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழப்பு

சென்னை:மே. 04-

சென்னையில், உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு பைக்கில் வீடு திரும்பிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர், கன்டெய்னர் லாரி மோதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

சென்னை, அம்பத்தூர் அடுத்த ஓரகடம், எம்ஜிஆர் தெருவைச் சேர்ந்தவர் கார்த்திகேயன் (42) கார் ஓட்டுநர். இவரது மனைவி பிரேமலதா (40). இவர்களது 8 வயது மகன் இன்ப செல்வன், அப்பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வந்தான். நேற்று முன்தினம் மாலை கார்த்திகேயன் தனது மனைவி மற்றும் மகனுடன் பைக்கில் கொடுங்கையூரில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று விட்டு, இரவு சுமார் 9 மணியளவில் அவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

மாதவரம் ஆந்திர பேருந்து நிலையம் அருகே அவர்கள் வந்து கொண்டிருந்த போது, பேருந்து நிலையத்தில் இருந்து ஆந்திர மாநில அரசுப் பேருந்து ஒன்று வெளியே வந்தது. அப்போது, பின்னால் வந்து கொண் டிருந்த கன்டெய்னர் லாரியின் ஓட்டுநர், பேருந்து வருவதைப் பார்த்து பிரேக் பிடித்துள்ளார். அப்போது, கட்டுப்பாட்டை இழந்த லாரி, பேருந்தின் பின் பகுதியில் லேசாக மோதியதோடு, முன்னால் சென்ற கார்த்திகேயனின் பைக் மீதும் பலமாக மோதியது.

இதில் நிலைத் தடுமாறிய கார்த்திகேயன், பிரேமலதா மற்றும் சிறுவன் இன்ப செல்வன் ஆகிய மூவரும் ஒரே பக்கமாக கீழே விழுந்தனர். கண் இமைக்கும் நேரத்தில் லாரியின் சக்கரம் அவர்கள் மீது ஏறி இறங்கியதில், மூவரும் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து, சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மாதவரம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் அன்பரசன் (40) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வளைகுடா இந்தியர்கள் அனுப்பும் பணம் குறையவில்லை: ரிசர்வ் வங்கி துணை கவர்னர் தகவல்



புதுடெல்லி: மே. 04-

வெளிநாடுகளில் பணியாற்றும் இந்தியர்கள், தாய்நாட்டுக்கு அனுப்பும் பணம் இந்திய பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கை வகிக்கிறது. குறிப்பாக வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியர்கள் அனுப்பும் பணத்தின் பங்களிப்பு 38 சதவீதமாக உள்ளது.அமெரிக்கா, ஈரான் இடையிலான போரால் ஒட்டுமொத்த வளைகுடா நாடுகளும் பாதிக்கப்பட்டு உள்ளன. இதனால் அந்த நாடுகளில் இருந்து இந்தியர்கள் அனுப்பும் பணம் கணிசமாக குறையும் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.இதுதொடர்பாக ரிசர்வ் வங்கி துணை கவர்னர் பூனம் குப்தா கூறியதாவது: கடந்த மார்ச் மாதத்தில் வளைகுடா இந்தியர்கள் அனுப்பிய பணம் வழக்கத்தை விட அதிகமாகவே உள்ளது.மேற்கு ஆசியாவில் (வளைகுடா நாடுகள் உட்பட) தகவல் தொழில்நுட்பம், சேவை, சுகாதாரம், கல்வி, கட்டுமானம் என பல்வேறு துறைகளில் இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில் ஏதாவது ஒரு துறையில் பாதிப்பு ஏற்பட்டால்கூட மற்ற துறைகளில் பணியாற்றும் இந்தியர்கள் தொடர்ந்து தாய் நாட்டுக்கு பணம் அனுப்பி வருகின்றனர். இதனால் இந்த விவகாரம் குறித்து கவலைப்படத் தேவையில்லை.கரோனா பெருந்தொற்று காலத்தையே வெற்றிகரமாக கடந்து வந்துவிட்டோம். ஈரான் போரால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு உள்ளது. நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும். பணவீக்கம் 4 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கும். இவ்வாறு பூனம் குப்தா தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் கத்திரி வெயில் நாளை தொடக்கம்; 5 டிகிரி வெப்பநிலை உயரும்: வானிலை ஆய்வு மையம்



சென்னை:மே. 04-

தமிழகத்தில் கத்திரி வெயில் நாளை தொடங்குகிறது என்றும், தமிழகம், புதுச்சேரியில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கோடை காலம் தொடங்கியதில் இருந்து கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. தினமும் பல நகரங்களில் 104 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு மேல் அதிகபட்ச வெப்பநிலை பதிவாகி வருகிறது.பகலில் கடும் வெயிலும், மாலை மற்றும் இரவில் கடும் புழுக்கமும் நிலவி வருகிறது. அதனால் பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியில் செல்வதை தவிர்த்து வருகின்றனர். இந்நிலையில், தமிழகத்தில் நாளை அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் தொடங்கி வரும் மே 28ம் தேதி வரை 25 நாட்களுக்கு நீடிக்க உள்ளது.

தமிழகத்தில் நாளை முதல் மே 9ம் தேதி வரை தமிழகத்தில் மழைக்கான வாய்ப்பு குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெற்கு சத்தீஸ்கர் முதல் குமரிக்கடல் வரை தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழகம் வழியாக, சுமார் 1.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (மே 4) முதல் மே 9ம் தேதி வரை ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, கரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலும், 5ம் தேதி, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும்.

6ம் தேதி நீலகிரி, கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 7ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களிலும், 8ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும், 9ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) கனமழை பெய்யக்கூடும்.தமிழகம், புதுச்சேரியில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும். 5 முதல் 7ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலேயே இருக்கும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் 10 செமீ, சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் 8 செமீ, மதுரை மாவட்டம் சோழவந்தான், சாத்தயார், தானியமங்கலத்தில் தலா 6 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கல்யாண ஊர்வலத்தில் அதிக சத்தத்தால் 140 கோழிகள் உயிரிழப்பு: உ.பி. ஒலி பெருக்கி உரிமையாளர் கைது



சுல்தான்பூர்:மே. 04-

உத்தர பிரதேசத்தில் அதிக சத்தம் காரணமாக 140 கோழிகள் உயிரிழந்தன. இதுதொடர்பாக ஒலி பெருக்கி உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உத்தர பிரதேசம் சுல்தான்பூரில் கடந்த 25ம் தேதி திருமண ஊர்வலம் நடைபெற்றது. அப்போது ஒலிபெருக்கியில் அதிக சத்தத்துடன் பாடல் ஒலிக்கப்பட்டுள்ளது. அப்போது அருகில் உள்ள கோழிப் பண்ணை ஒன்றில் சில கோழிகள் அதிர்ச்சியில் இறந்துள்ளன. இதையடுத்து கோழிப் பண்ணை உரிமையாளர் முகமது சபிர், ஒலி பெருக்கி (டி.ஜே) உரிமையாளரிடம் சத்தத்தை குறைக்கும்படி கூறியுள்ளார். ஆனால், அவர் கண்டுகொள்ளவில்லை. கோழிப்பண்ணை ஊழியரிடம் 3 முறை வேண்டுகோள் விடுத்தும், பலன் இல்லை.ஒலிபெருக்கியின் சத்தத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில் கோழிப் பண்ணையில் இருந்த 140 கோழிகள் உயிரிழந்தன. இதனால் போலீஸ் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு முகமது சபிர் புகார் தெரிவித்தார்.

போலீஸார் வந்ததும் இழந்த கோழிகளுக்கு இழப்பீடு தருவதாக டி.ஜே. உரிமையாளர் கூறினார். போலீஸார் சென்றதும் அவர் தப்பிச் சென்றுவிட்டார். இறந்த கோழிகளைப் பரிசோதனைக்கு அனுப்பியதில், அதிக சத்தத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இதய செயலிழப்பு ஏற்பட்டு கோழிகள் இறந்ததாக உடற்கூறு ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து டி.ஜே. உரிமையாளரை கைது செய்து அவரது டி.ஜே. வாகனத்தையும் பறிமுதல் செய்தனர். அவரிடம் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# சொக்கம்பட்டியில் பூக்குழித் திருவிழா! ஸ்ரீ சந்தன மாரியம்மனுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேர்த்திக்கடன்



கடையநல்லூர் மே 04-

தென்காசி மாவட்டம் கடையநல்லூரை அடுத்த சொக்கம்பட்டியில், தேவர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ சந்தன மாரியம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. விழாவின் சிகர நிகழ்ச்சியான பூக்குழி இறங்குதலில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்தினர்.

ஏப்ரல் 30ம் தேதி பால்குடம் மற்றும் தீர்த்தக்குடம் ஊர்வலமும், நள்ளிரவில் அம்மன் தேர்பவனியும் நடைபெற்றது. அரசடி விநாயகர் கோவிலில் இருந்து தீச்சட்டி மற்றும் முளைப்பாரி ஊர்வலம் மேளதாளங்கள் முழங்கப் புறப்பட்டது. கேரளா செண்டை மேளம் மற்றும் வாணவேடிக்கைகள் அதிர, ஊர்வலமாக வந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் பக்தி கோஷங்களுடன் பூக்குழி இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினர். இரவில் பொங்கலிடுதல் மற்றும் தஞ்சாவூர் கரகாட்டக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதற்கான ஏற்பாடுகளை விழா கமிட்டியினர் சிறப்பாகச் செய்திருந்தனர்.



# இந்திய தேர்தல் ஆணையத்தின் 'தற்செயல் கலப்பு' முறைப்படி ஊழியர்கள் நியமனம்

புதுச்சேரி மே 04-

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை முன்னிட்டு, வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களைத் தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யும் இரண்டாம் தற்செயல் கலப்பு முறை புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட மேலிடப் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் முன்னிலை வகித்தனர். தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, கணினி வழியாக வெளிப்படையான முறையில் எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், எண்ணிக்கை உதவியாளர்கள் மற்றும் நுண்பார்வையாளர்கள் பல்வேறு சட்டமன்ற தொகுதிகளுக்குத் தற்செயலாக ஒதுக்கப்பட்டனர்.தேர்தல் செயல்முறையின் நேர்மையைப் பேணுவதற்காக அனைத்து நடைமுறைகளும் முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டன. இதற்கான விரிவான ஏற்பாடுகளை மனிதவள மேம்பாடு ஒருங்கிணைப்பு அதிகாரி திரு. முரளிதரன் செய்திருந்தார். நாளை காலை முதல் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளதால் புதுச்சேரி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



# சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத் தயார்! திருப்பூரில் தேர்தல் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தீவிரம்

திருப்பூர் மே 04-

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026ன் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளதை முன்னிட்டு, திருப்பூர் மாவட்டம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அமைதியான முறையில் வாக்கு எண்ணிக்கையை நடத்தி முடிக்கவும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும் காவல்துறையினரின் அதிரடிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.காவல்துறை அணிவகுப்பு:திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக் உத்தரவின்படி, மாவட்டத்தின் அனைத்து உட்கோட்டங்களிலும் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளிலும் காவல்துறையினரின் கொடி அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.அந்தந்த உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த அணிவகுப்பில், நூற்றுக்கணக்கான காவலர்கள் கலந்துகொண்டனர். பொதுமக்களிடையே பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தவும், அசம்பாவிதங்களைத் தவிர்க்கவும் இந்த அணிவகுப்பு முக்கிய வீதிகள் வழியாக நடத்தப்பட்டது. வாக்கு எண்ணும் மையங்களைச் சுற்றி மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகத் மாவட்ட காவல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# பெண்களிடம் மட்டுமே இப்படியொரு கேள்வி ஏன்? நடிகை மலைகா அரோரா ஆதங்கம்

சென்னை மே 04-

பிரபல இந்தி நடிகையான மலைகா அரோரா, திரைத்துறையில் 30 ஆண்டுகளைக் கடந்து நடித்து வருகிறார். சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில் சமூகத்தில் நிலவும் பாலினப் பாரபட்சம் குறித்து ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.அவர் கூறும்போது, "எனது தோற்றம் குறித்து பாராட்டுகள் குவிந்தாலும், மற்றொரு பக்கம் வயதாவது குறித்த கவலை ஏற்படுகிறதா? என்று கேட்கின்றனர்.



இது ஒரு இரட்டை முனை கத்தி போன்றது. சில நேரங்களில் இந்த எண்ணம் என் மனதைக் கடந்து செல்லும்; நான் என்னையே கேள்வி கேட்டுக்கொள்வேன். ஆனால் மற்ற நேரங்களில், இதைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஏனென்றால் நான் விரும்புவதைச் செய்கிறேன், அதை அனுபவிக்கிறேன். நான் இப்போதுதான் என் வாழ்வின் மிகச்சிறந்த காலகட்டத்தில் இருப்பதாக உணர்கிறேன்.அதே நேரம், முன்பு அழகாக இருந்தீர்கள், இப்போது வயதாகிவிட்டதே, இப்போதும் கவர்ச்சியாக உணர்கிறீர்களா? என்ற கேள்விகள் பெண்களை நோக்கி மட்டுமே வீசப்படுகின்றன. இதே போன்ற கேள்வியை ஒரு ஆணிடம் யாரும் கேட்டு பார்த்ததுண்டா? ஆண்களிடம் அவர்களது வயது குறித்து யாரும் கேள்வி கேட்பதில்லை. எனக்கு வயது என்பது முட்டுக்கட்டை அல்ல. இன்னும் நிறைய சாதிக்க வேண்டும் என்ற பசியுடன் இருக்கிறேன். அந்த ஆர்வம் இருக்கும்போது, வயதான தோற்றம் என்பது என்னைப் பாதிப்பதில்லை.

உடல் ரீதியான தோற்றம் மட்டுமே முக்கியமல்ல. மனநிலை மற்றும் உணர்ச்சி ரீதியான பலத்துடன் அதைச் சமநிலைப்படுத்த வேண்டும். உங்களை இயக்கும் சக்தி எது? ஒவ்வொரு நாளும் எழுந்து, 'இந்த நாளை வென்று காட்டு' என்று உங்களைத் தூண்டுவது எது? என்பதுதான் முக்கியம். அதனால் ஒவ்வொரு முறையும் கண்ணாடியை பார்த்து, 'நான் அழகாக இருக்கிறேன்' என்று நினைத்துக்கொண்டு முழிப்பதில்லை. இன்று ஒரு புதிய நாள், இதைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். எதையாவது புதிதாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நான் எழுகிறேன்" எனத் தெரிவித்தார்.



■ புதுச்சேரி மாநிலத்தில் கடந்த ஏப்ரல் 9 ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாட்டுகளுடன் புதுவை லாஸ்பேட்டையில் அமைந்துள்ள தாகூர் கலைக் கல்லூரி, மகளிர் பொறியியல் கல்லூரி, மோதிலால் நேரு தொழில்நுட்பக்கல்லூரி ஆகிய மூன்று வாக்கு எண்ணும் மையங்களில் வைக்கப்பட்டுள்ளது. அந்த மூன்று மையங்களில் மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் இறுதிக்கட்ட ஆய்வு மேற்கொண்டார்கள். வாக்கு எண்ணும் மையங்களில் வாக்கு எண்ணிக்கைக்கு செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, கூடுதல் மாவட்ட ஆட்சியர் சுதாகர், E.V.M. ஒருங்கிணைப்பாளர் சுரேஷ்ராஜ் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.



# "செல்போன் திரையைத் தவிர்ப்போம்!" திசையன்விளையில் ஜெயராஜேஷ் பள்ளிகள் நடத்திய 'No Screens' மாரத்தான்

திசையன்விளை மே 04-

செல்போன் மற்றும் மின்னணுத் திரைப் பயன்பாட்டைக் குறைப்பதை வலியுறுத்தி (No Screens), திசையன்விளை ஜெயராஜேஷ் மெட்ரிக். மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகள் இணைந்து நடத்திய பிரம்மாண்ட விழிப்புணர்வு மாரத்தான் போட்டி உணர்வுப்பூர்வமாக நடைபெற்றது.நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் இந்த விழிப்புணர்வு ஓட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். திசையன்விளை ஜெயராஜேஷ் வித்யா மந்திர் சீனியர் செகண்டரி பள்ளியில் இருந்து தொடங்கிய இந்த மாரத்தான், மொத்தம் 3 கி.மீ தூரம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. திசையன்விளை காவல்துறை ஆய்வாளர்எழில் சுரேஷ் சிங் பச்சைக்கொடி அசைத்து மாரத்தானைத் தொடங்கி வைத்தார். ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்றவர்களின் உற்சாகத்தை அதிகரிக்கும் வகையில், பள்ளி நிர்வாகம் சார்பில் ஆங்காங்கே குடிநீர் மற்றும் சத்துணவுப் பழங்கள் வழங்கப்பட்டன.போட்டியில் இலக்கை முதலில் எட்டிய 10 வெற்றியாளர்களுக்குப் பரிசுக்கோப்பைகளும், பங்கேற்ற அனைவருக்கும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. ஆய்வாளர் எழில் சுரேஷ் சிங் வெற்றியாளர்களுக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். திசையன்விளை காவல்துறையினர் மாரத்தான் பாதையில் சிறப்பான பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டனர். பள்ளி நிர்வாகத்தினர் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

# வருவாய் பகிர்வு ஊதியத்தை வலியுறுத்தி தயாரிப்பாளர்கள் வேலை நிறுத்தம்

சென்னை:மே. 04-

தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில், ஒரு நாள் வேலை நிறுத்தம் நேற்று நடைபெற்றது. மீடியம் மற்றும் பெரிய பட்ஜெட் படங்களுக்கு நடிகர்கள் வருவாய் பகிர்வு அடிப்படையில் சம்பளத்தைப் பெற வேண்டும் என்று தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்க பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுகுறித்த கவனத்தை ஈர்க்க மே 2ம் தேதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. தென்னிந்திய நடிகர் சங்கம் வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியது.

ஆனால், அறிவித்தபடி, தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில் நேற்று வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதனால் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் நடித்த சுமார் 30க்கும் மேற்பட்ட படப்பிடிப்புகள் பாதிக்கப்பட்டன. இதனால் பல கோடி அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள தயாரிப்பாளர் சங்கம், "தயாரிப்பாளர்களின் லாப நஷ்டங்களில் நடிகர்கள் பங்கு கொள்ள வேண்டும் என்று கடந்த 3 ஆண்டு காலமாக நடிகர் சங்கத்துக்கு நேரிலும், கடிதம் மூலமாகவும் பலமுறை தெரிவித்துள்ளோம். அவர்கள் இதுநாள் வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்து வருகிறார்கள். எனவே திரைத்துறையில் உள்ள அனைவரின் கவனத்துக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வது என்று பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த அடையாள வேலை நிறுத்தத்துக்கு ஒத்துழைப்பு நல்கிய தென்னிந்தியத் திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளன தலைவர் ஆர்.கே.செல்வமணி மற்றும், நிர்வாகிகள் மற்றும் அனைத்து தொழிலாளர்களுக்கும் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது. வேலை நிறுத்தம் காரணமாக திரைப்படம் தொடர்பான எந்த வேலைகளும் நேற்று நடைபெறவில்லை.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000